**அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 6**

**மார்ச் - 2026 மேல்நிலை பொதுத் தேர்வுகள்**

**விடைத்தாள் நகல் பதிவிறக்கம் செய்தல் மற்றும் விடைத்தாள் மறுகூட்டல்/மறுமதிப்பீடு விண்ணப்பித்தல்**

**செய்திக்குறிப்பு**

மார்ச் 2026 மேல்நிலைத் தேர்வுக்கான தேர்வு முடிவுகள் 8.5.2026 அன்று வெளியிடப்பட்டது. தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டவுடன் விடைத்தாள் நகல் தொடர்பான பணிகள் மேற்கொள்ளப்பட்டு, அவற்றுக்கான விண்ணப்பங்கள் மாநிலம் முழுவதும் இருந்து பெறப்பட்டுள்ளது. கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு கூடுதல் எண்ணிக்கையில் விடைத்தாள் நகல் விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| கடந்த ஆண்டு விடைத்தாள் நகல் கோரி விண்ணப்பித்தோர் எண்ணிக்கை (மார்ச் 2025) | : | 51720 |
| இந்த ஆண்டு விடைத்தாள் நகல் கோரி விண்ணப்பித்தோர் எண்ணிக்கை (மார்ச் 2026) | : | 67812 |

விடைத்தாள் நகலுக்கு விண்ணப்பித்த மாணவர்கள் 05.06.2026 **(வெள்ளிக்கிழமை) பிற்பகல் முதல்** 16.06.2026 **(செவ்வாய்க்கிழமை)** வரை விடைத்தாள் நகலினை பாடவாரியாக பல்வேறு கட்டங்களாக www.dge.tn.gov.in என்ற இணையதளத்திற்கு சென்று Higher Secondary Examination என்ற வாசகத்தினை Click செய்தால் தோன்றும் பக்கத்தில் Higher Secondary March 2026 – Scan Copy Download என்ற வாசகத்தினை click செய்தால் தோன்றும் பக்கத்தில் தேர்வர்கள் தங்களது பதிவெண் மற்றும் பிறந்த தேதியினை உள்ளீடு செய்து பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். விடைத்தாள் நகல்கள் பாட வாரியாக பல்வேறு கட்டங்களாக இவ்வியக்ககத்தால் இணையதளத்தில் வெளியிடப்படும். பாடவாரியான விடைத்தாள் நகல் பதிவிறக்கம் செய்யும் நாட்களின் விவரங்கள் இவ்வலுவலகத்தின் மூலம் அவ்வப்போது செய்திக்குறிப்பாக ஒரு நாள் முன்னதாக வெளியிடப்படும். மேலும் www.dge.tn.gov.in என்ற இணையதளத்திலும் தெரிந்துகொள்ளலாம்.

விடைத்தாள் நகல்களை பதிவிறக்கம் செய்த பின்னர் தேர்வர்கள் மறுகூட்டல் / மறுமதிப்பீட் படிவத்தையும் மேற்காண் இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளவேண்டும். மறுகூட்டல்/ மறுமதிப்பீடு செய்ய விரும்பினால் பூர்த்தி செய்த விண்ணப்பங்களை அந்தந்த மாவட்டத்தில் உள்ள அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகத்தில் 16.06.2026 **-க்குள்** மறுகூட்டல் மற்றும் மறுமதிப்பீட்டிற்கான கட்டணத்தினை பணமாகச் செலுத்தி விண்ணப்பிக்க வேண்டும்.

தென்காசி, இராணிப்பேட்டை, திருப்பத்தூர், கள்ளக்குறிச்சி, செங்கல்பட்டு மற்றும் மயிலாடுதுறை மாவட்டங்களில் மறுகூட்டல் அல்லது மறுமதிப்பீட்டிற்கு விண்ணப்பிக்க விரும்பும் தேர்வர்கள் சம்பந்தப்பட்ட மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் அலுவலகத்தில் விண்ணப்பப் படிவங்களை ஒப்படைத்து, அதற்குரிய கட்டணத் தொகையை பணமாக செலுத் விண்ணப்பிக்க வேண்டும்.

<u>மறுமதிப்பீடு</u>

பாடம் (ஒவ்வொன்றிற்கும்) - ரூ. 505/-

<u>மறுகூட்டல்</u>

உயிரியல் பாடம் மட்டும் - ரூ.305/-

ஏனையப் பாடங்கள் (ஒவ்வொன்றிற்கும்) - ரூ.205/-

05.06.2026 அன்று விடைத்தாள் நகல் பதிவிறக்கம் செய்வதற்கான பாடத்தின் விவரம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. மேலும், விடைத்தாள் நகல் பதிவிறக்கம் மற்றும் மறுகூட்டல்/ மறுமதிப்பீட்டிற்கு விண்ணப்பிப்பது தொடர்பான சந்தேகங்களுக்கு 9498383075 / 9498383076 என்ற கைப்பேசி எண்களுக்கு தொடர்பு கொள்ளலாம்.

**இணைப்பு:**

பாடப் பட்டியல்

ஒம்/-

**இயக்குநர்**

**இடம்: சென்னை-6**

**நாள்: 04.06.2026**

**05.06.2026 அன்று விடைத்தாள் நகல் பதிவிறக்கம் செய்யக்கூடிய பாடங்கள்** :

| I. மேல்நிலை முதலாமாண்டு (ARREAR) பாடங்கள் : | |
|---|---|
| **SUBJECT** | **SUBJECT NAME** |
| 101 | LANGUAGE |
| 103 | ENGLISH |
| 105 | PHYSICS |
| 107 | CHEMISTRY |
| 109 | BIOLOGY |
| 113 | ZOOLOGY |
| 121 | GEOGRAPHY |
| 141 | MATHEMATICS |
| 145 | HISTORY |
| 149 | ECONOMICS |
| 151 | POLITICAL SCIENCE |
| 155 | COMMERCE |
| 157 | ACCOUNTANCY |
| 177 | BUSINESS MATHEMATICS AND STATISTICS |
| 179 | COMPUTER APPLICATIONS |
| II. மேல்நிலை இரண்டாமாண்டு பாடங்கள் : | |
| 511 | BOTANY |
| 513 | ZOOLOGY |
| 517 | STATISTICS |
| 521 | GEOGRAPHY |
| 531 | MICRO BIOLOGY |
| 533 | BIO CHEMISTRY |
| 537 | NUTRITION & DIETETICS |
| 539 | COMMUNICATIVE ENGLISH |
| 569 | ADVANCED LANGUAGE (TAMIL) |